ஆசிரியர்
வார இதழ் மு. கருணாநிதி

முரசு 3 | 22—2-57 | வெள்ளி | ஒலி 46

செறிக்க முடியாததை விழுங்கியிருக்கிறார், 'பச்சைத் தமிழர்'!

★ ஏமாந்தோம்; ஏமாந்தோம்! ★

இனியும் இருக்கலாமா இந்த நிலை?

"தென்னிந்தியாவில் தொழில் வளர்ச்சி மிகப் பின்தங்கிக் கிடக்கிறது......

இந்தப் பகுதியில் தொழில் வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் நோக்குடனும் அருகில் கிடைக்கும் இயற்கை வளங்களைப் பயன்படுத்தும் நோக்குடனும் காஸ்டிக் சோடா தொழிற்சாலை ஒன்று தூத்துக்குடிக் கருகே துவங்கப்பட்டது....... இதனை நடத்த, அங்கீகரிக்கப்பட்ட ஒரு கோடி ரூபாய் முதலீடு கொண்ட 'ஹெவி கெமிக்கல்ஸ் லிமிடெட்' என்ற பெயரில் ஒரு நிறுவனமும் அமைத்தோம்...முதல் கட்டத்தில் தினம் 5 டன் காஸ்டிக் சோடா உற்பத்தி செய்வது; இரண்டாம் கட்டத்தில் தினம் 10 டன் உற்பத்தி செய்வது என்பது திட்டமாகும்.

சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த பிரபல கம்பெனிகள், தொழிற்சாலைக்கான இயந்திரங்களை அமைத்தன. அவைகள் நிறுவப்பட்ட ஹெவி கெமிக்கல்ஸ் நிறுவனத்தின் முதலீட்டிலும் பங்கு பெற்றன.

1950-ம் ஆண்டிலேயே சென்னை சர்க்கார், கம்பெனியில் ரூ 10 லட்சம் பெறுமான முதலீட்டுப் பங்கு பெற்றுக் கொள்வதாக வாக்களித்திருந்தது. ஏற்கனவே ரூ. 17 இலட்சம் முதலீடு சேர்ந்து விட்டது.

1953-ல் மைசூர் மகாராஜா தொழிற்சாலைக்கு அஸ்திவாரக் கல் நாட்டினார். 1954-ல் சென்னை கவர்னர் ஸ்ரீபிரகாசா தொழிற்சாலையின் பரிசோதனைக்கூடத்தைத் திறந்து வைத்தார்.

நூறு ஏக்கர் நிலம் வாங்கி வேலி அமைத்து தொழிற்சாலைக்கான கட்டிடங்கள், தொழிலாளர்கள், அதிகாரிகள் ஆகியோருக்கான வீடுகள் எல்லாம் கட்டி முடித்தாயிற்று.

இயந்திரங்களைச் சீக்கிரம் பெற்றுவருவதற்காக ஜே எல். பி. ரோச் விக்டோரியா, சுவிட்சர்லாந்து சென்று ஏற்பாடுகளை முடித்து வந்தார்.

மின்சார இயந்திரங்கள் சென்னைக் 'கிராம்டன் எஞ்சினியரிங் கம்பெனி'யாரிடமிருந்து வாங்கப்பட்டு விட்டன.

தொழிற்சாலைக்குள் இரயில் பாதைகளை தென்பகுதி இரயில்வே இலாகாவினர் போட்டு விட்டனர்.

பாளையங்கோட்டை — தூத்துக்குடிச் சாலையை, தொழிற்சாலை இருக்குமிடத்துடன் இணைக்கும் சாலைக்கான வேலையும் முடிந்து விட்டது.

இரண்டு குழாய்க் கிணறுகளும், வேறு இரு கிணறுகளும் தயாராகி விட்டன.

டெலிபோன் வசதி ஏற்கனவே செய்யப்பட்டு விட்டது.

இந்தத் தொழிற்சாலைக்கான பெர்மிட், லைசென்ஸ் முதலியன ஐந்தாண்டுகளுக்கு முன்பாகவே மத்திய சர்க்காரால் தரப்பட்டது.

ஆனால்...!

1955-ல், சௌராட்டிர மாநிலத்தை (வடநாட்டை)ச் சேர்ந்த 'தாரங்கதாரா கெமிகல் ஒர்க்ஸ்' என்ற கம்பெனியாருக்கு, மதுரை டி. வி. சுந்தரம் அய்யங்கார் கம்பெனி மூலம் மத்திய சர்க்கார், தூத்துக்குடி அருகே சோடா ஆஷ் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை நிறுவ அனுமதி தந்தார்.

அவர்கள் முதலில், சோடா ஆஷ் மட்டுமே தயாரிக்கப் போவதாகக் கூறி, பின்னர் காஸ்டிக் சோடாவும் தயாரிக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

இது 1953-ம் ஆண்டே வேலை துவங்கிவிட்ட 'ஹெவி கெமிக்கல்ஸ்' ஸ்தாபனத்திற்கு இழைக்கப்படும் அநீதியாகும்.

சென்னை சர்க்காரிடம் இது பற்றிப் பலமுறை முறையிட்டோம். ஆனால் சென்னை சர்க்கார் கையாலாகாதவர்களாயிருக்கின்றனர். ஏனெனில், சென்னை மாநிலத்தில் என்ன செய்ய வேண்டும் — என்ன செய்யக்கூடாது என்று மத்திய சர்க்காரின் வர்த்தகத் தொழில் இலாகா கட்டளை இடுகிறது. சென்னை சர்க்கார் மத்திய சர்க்காரின் பாவாடை நாடாவில் கட்டுண்டு கிடக்கிறது.

எனவே...!

தென்னாட்டின் தொழில் வளர்ச்சியில் அக்கரை கொண்ட எல்லோரும் ஒன்று சேர்ந்து, பொதுவாக தென்னாட்டினுடையவும், குறிப்பாகச் சென்னை மாநிலத்தினுடையவும் பொருளாதார விடுதலை, நம்மிடமிருந்து தட்டிப் பறித்துச் செல்லப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசர அவசியமானதாகும்..."

இவை சென்னை மாநில முன்னாள் உணவு அமைச்சரும், இன்றைய காங்கிரஸ் எம். எல். ஏ. யுமான **ஜே. எல். பி. ரோச் விக்டோரியா** அவர்கள், 1956 செப்டம்பர் முதல்தேதியிட்டுத் தமிழ்நாட்டு அரசியல்வாதிகளுக்கு அச்சடித்து அனுப்பியுள்ள பகிரங்கக் கடிதத்தின் பகுதிகள்.

வடவரின் இந்தப் போக்கு

தென்னாட்டு மக்களை கலப்பற்ற - பரிபூரணமான நிரந்தர அடிமைகளாக்கச் சதி செய்யும்

ஏகாதிபத்தியப் போக்கு

என்று கண்டனம் முழங்குகிறது

தி. மு. க.

இதுதான் 'இந்திய ஒற்றுமை' என்கின்றனர் 'அகில இந்தியா'க்கள்!

★

வாக்காளரே! கூறுங்கள்!

உங்கள் நாட்டுக்குத் துரோகம் இழைக்கும் வடநாட்டு ஏகாதிபத்திய தாசர்களான

'அகில இந்தியா'க்களுக்காக

உங்கள் வாக்கு?

★

நாடு செழிக்க-நாட்டவர் வாழ்வுபெற

தி.மு.க.அபேட்சகர்களுக்கே

வாக்கு அளியுங்கள்!

தாலமுத்து; நடராசனைப் பலி கொடுத்தோம்--

கட்டாய இந்தி கல்லறை புகுந்தது!

5000 வீரர்களைக் காராக்கிரகத்திற்கு அனுப்பினோம்--

உங்கள் குழந்தைகளைக் குருடர்களாக்கிய குலதர்மக் கல்வித் திட்டம் கொன்று குவிக்கப்பட்டது!

தெருத் தெருவாக கைத்தறித் துணிகளைச் சுமந்து விற்றோம்--

கைத்தறி விற்பனை திண்ணையளவிலிருந்து பனையளவு பெருகியதாக நிதி அமைச்சரே கணக்கு தந்தார்!

மேலும் பணி புரிய உங்கள் ஆதரவு நாடி வருகிறோம்!

நீங்கள் எமக்கு வாக்குத் தருகிற ஒவ்வொரு 'சீட்'டும் இந்த நாட்டிலே நிலவிவரும் ஒரு கட்சி சர்வாதிகாரத்தை மாற்றியமைக்கும் 'துருப்புச் சீட்டு' என்பதை மட்டும் மறந்து விடாதீர்கள்!



வெள்ளி 22—2—57 சென்னை

தாலி ஜாக்கிரதை!

சேலம் நகர் இருந்து சேவல் கூவிட; செங்கதிர் உதயமாகி விட்டது, தென்னகத்தில்!

அதுபோலவே தென்னகத்தின் விடுதலைத் தானையாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது பகைவர் பூட்டும் புதிய கணைகளும் பாய்ந்து வரத் துவங்கிவிட்டன!

ஓய்ந்து போனவர்கள்; தனித்து நிற்க முடியாமல் இதுவரை வேறொரு இயக்கத்தின் நிழலைச் சார்ந்து கிடந்தவர்கள்; இவர்கள்கூட தி. மு. கழகம் தென்னகத்தின் மகத்தான எதிர்க் கட்சியாக உருவாகி வருவதைத் தாங்கமாட்டாதவர்களாய் நம்மீது தணல் பெய்ய முன் வந்துவிட்டனர்!

எனினும் அவர்கள் தலைவர் பண்டித நேரு முசார்பூர் என்னும் இடத்திலே பேசியிருக்கிறார்:

"ஜனநாயக முறையில் ஒவ்வொரு கட்சியும் தன் திட்டத்தை மக்கள் முன் சமர்ப்பித்து அவர்களது ஆதரவைப் பெற வேண்டும். இதைக் கண்ணியமான முறையில் செய்ய வேண்டும். கட்சிகள் ஒன்றுக் கொன்று வசைமாரி பொழிந்து கொள்வதையும், காலித் தனமாக நடந்து கொள்வதையும் தவிர்க்க வேண்டும்!"

—பஞ்சசீலம் தந்தவர் ஜனநாயகக் கட்சிகளின் சீலம் பற்றிப் பேசியிருக்கிறார்!

கட்சிகள் தங்களது திட்டத்தைக் கூறவேண்டுமே ஒழிய; பிற கட்சிகள்மீது **வசைமாரி** பொழியக் கூடாது!

—அருமையான உபதேசம்தான்!

ஆனால் ஆளுங் கட்சியினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக் கிறதா?

முதன் முறையாகக் கட்சிப் பிரச்சாரத்திற்கு ஒரு பணமுதலை யைக் கொண்டு படமெடுத்துத்தர ஏற்பாடு செய்ததே தமிழ்நாடு சாங்கிரஸ் கமிட்டி; அந்தப் படத்திலே தனது திட்டங்கள் இன்னின்னவை என்று பொதுமக்களுக்கு விளக்க முரைத்ததா? விவரம் சொடுத் ததா? இல்லை. அதை விட்டு காளை மாடு ஒன்று ஓடி வருவதுபோல வும்; அதைக் கண்டு தி. மு. கழகத் தோழன் ஒருவன் ஓடி ஒளிவ தாகவும் மிக மட்டரகமான முறையில் படம் பிடித்துக் காட்டிற்று!

– இதுபோல் தன் இயக்கத்தவரைப் பித்தலாட்ட முறைகளில் பழக்கி வரும் அதே பண்டிதர்தான் மேலும் பேசுகிறார்:

"இந்தப் பிரதேசத்தில் (முசார்பூர்) சாங்கிரசை எதிர்க்கும் கட்சிகள் சென்ற ஆண்டு போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் ஒன்றில் இறந்து போன ஒரு நபரின் மனைவியை ஊர்வலமாக அழைத்துச் செல்வது என்று திட்டமிட்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். ஒரு பெண்ணை இவ்விதம் உபயோகித்து மக்களின் உணர்ச்சியைத் தூண்டி, தேர் தலில் பயன்படுத்திக் கொள்வது கண்ணியமற்றதாகும்!"

—காங்கிரஸ் அரசாட்சி பின்பற்றிய கண்மூடிக் கொள்கையால் உயிர் பறிகொடுத்த உத்தமனின் மனைவியை பொதுமக்கள் ஊர்வல மாக அழைத்து வந்து; இந்தப் பெண்மணியின் தாலியைப் பறித்துக் கொண்ட சாங்கிரசிற்கா உங்கள் ஓட்டு—என்று கேட்பது கண்ணிய மற்ற செயலாம்!

அசோகச் சக்கரத்தைக் கொடியிலே பொறித்தோர் வீடுகளிலே தேம்பவிட்டிருக்கும் கண்ணீர்த் துளிகளை நாடறியக் காட்டுவது கண்ணியமற்ற செயலாகத் தெரிகிறதாம், அவருக்கு!

ஒரு முறையா; இரு முறையா? **சென்ற பத்தாண்டுக் கால காங்கிரஸ் ஆட்சியிலே 2500 முறை துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றிருக்கிறது.**

அதன் காரணமாக, 4500 பேர் கொலை செய் யப்பட்டிருக்கிறார்கள், காந்தி நெறியில் செங்கோல் பிடித்து வரும் இந்த ஜெகப் புரட்டர்கள் துரைத் தனத்தில்.

12,000 பேர் காயம் பெற்றிருக்கிறார்கள்!
65,000 பேர் காராக்கிரகம் புகுந்திருக்கிறார்கள்.

மீண்டும் கவனப்படுத்திப் பாருங்கள்!

சராசரி கணக்கிட்டால் ஆண்டொன்றுக்கு 250 துப்பாக்கிப் பிரயோகங்கள் இந்த உப கண்டத்திலே!

ஆண்டொன்றுக்கு 450 பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர், இந்த அகிம்சா ஆட்சியில்!

இதிலே கணவனை இழந்தோர், பெற்ற மதலையைப் பறி கொடுத் தோர்; மலையைப்போல் நம்பியிருந்து முடிவில் கதியற்றவரானோர் - இவர்கள் அனைவரும் அடங்கி யிருக்கின்றனர்!

இந்தப் பட்டியல் பெருகலாமா? பரத கண்டத்தவர் பராரியாய் ஆகலாமா? என்று முசார்பூர் வாசிகள் வாக்காளர்களைப் பார்த்துக் கேட்டால் ஒரு பெண்ணை உபயோகித்து கண்ணியமற்ற பிரச்சாரத்தில் ஈடுபடுகிறீர்களே—என்று கேட்கிறாராம் பண்டிதர்!

ஒரு பெண்ணின் கணவனது மார்பிலே துப்பாக்கி ரவைகளைப் பாய்ச்சி; அந்த மாதரசியின் கழுத்திலே மின்னிக் கொண்டிருந்த மஞ் சள் கயிற்றை வெடுக்கென்று அறுத்தெறிந்தது கண்ணியமற்ற—காட்டு மிராண்டிச் செயல் அல்லவாம்!

ஆனால் அந்தப் பெண்ணுக்கு நேர்ந்த அவல நிலை நாட்டிலே யுள்ள மற்ற பெண்களுக்கும் ஏற்படக்கூடாது என்று கூறுவதிலே —எடுத்துக் காட்டுவதிலே மட்டும் கண்ணியம் குறைந்து விட்டதாம்!

ஒரு பெண்ணை வைத்துக் காசு பறிக்க முயலும் கயமைத்தனத் தில் ஈடுபட்டவர்களா முசார்பூர் வாசிகள்?

கட்டான உடல் பாரீர்; முல்லை மொட்டான பற்கள் காணீர்! —என்று 'மன்மதக் கணைகள்' பூட்டி சழக்கர் வேலையா புரிந்தார்கள், அவர்கள்?

அந்தக் கண்ணியமற்ற செயல்புரியும் நீசர்கள்தான் பம்பாய், டெல்லி போன்ற நகரங்களிலே அரசாங்கத்தின் அனுமதிச் சீட்டு பெற்று விபச்சார விடுதிகளை நடத்தி வருகிறார்களே!

அவர்களைத் தடுத்து நிறுத்த முடியாத இந்தக் கேடு கெட்ட துரைத்தனத்தின் தலைவர்தான் முசார்பூர் நகரத்திலே தாலியிழந்த விதவையை ஊர்வலமாக அழைத்து வந்து; ஊர் மக்களுக்குப் பாடம் புகட்டுவதைக் கண்டிக்க வந்துவிட்டார்!

ஒரு பெண்ணை வைத்து பிரச்சாரம் நடத்துகிறார்களாம்! —கூற வந்து விட்டார், பண்டிதர்!

ஒரு பெண்ணுக்காக ஆவடி மாநாட்டிற்குச் சென்று கொண் டிருந்தவர் காரை நிறுத்திவிட்டு, கோகிலவாணியின் தரிசனத்திற்குக் காத்துக் கிடந்தாராம்!

அவர்தான் 'இந்த அவல நிலைமை உங்களுக்கு வேண்டாம்' — என்று எடுத்துணர்த்த வந்த முசார்பூர் மக்கள்மீது பாய்ந்து விழுகிறார்!

சென்னை, மதுரை போன்ற பெரும் பெரும் நகரங்களிலே ஒரு பெண்ணின் பாட்டுக் கச்சேரியை வைத்து-அதுவும் சாதாரணப் பெண் ணல்ல; பத்ம விபூஷணி பட்டம் பெற்ற 'கோகிலவாணி'யின் பிரார்த் தனை கீதம் நடத்தி -'வியாசர் விருந்து' புத்தக விற்பனைக்கு ஆதரவு தேடிவருகிறார், இந்த உபகண்டத்தில் மாஜி கவர்னர் ஜெனரல் ஆச்சாரியார்!

ஆண்டவன் மேன்மை கூறும் நூலுக்கு விற்பனை தேட கோகில வாணியின் இசை தேவைப்படுகிறது!

மாஜி கவர்னர் ஜெனரலே நூலாசிரியாக இருந்தாலும்கூட சுப்பு லட்சுமியின் பிரார்த்தனை அவசியப்படுகிறது!

'ஒரு பெண்ணை உபயோகித்து; மக்களின் உணர்ச்சியைத் தூண்டி; தேர்தலில் பயன்படுத்திக் கொள்வது கண்ணியமற்றதாகும்' என்கிறார் பண்டிதர்!

அப்படியானால் 'ஒரு பெண்ணை உபயோகித்து; மக்களின் உணர்ச் சியைத் தூண்டி' பக்திப் புத்தகத்தின் விற்பனைக்குப் பயன்படுத்திக் கொள்வது மட்டும் கண்ணியமற்ற செயலாகாதா?

அதைக் கண்டனம் செய்ய முன் வராதவர்; சொந்தக் கட்சியினர் படமெடுத்து மாற்றுக் கட்சியினர்மீது வசைமாரி பொழிவதைத் தடுக்க முடியாதவர் ஊருக்கு உபதேசம் செய்ய மட்டும் ஏன் முன் வர வேண்டும்?

அய்யோ; தாய்மார்களே! நீங்கள் கழுத்திலே அணிந்திருக்கும் தாலிக் கயிறு ஜாக்கிரதையாக இருக்கட்டும்; தாலிச் சரட்டிலுள்ள பொன்னை கிருஷ்ணமாச்சாரியார் ஐந்தாண்டுத் திட்டச் செலவிற்காக கவர்ந்து செல்வதற்கு முன்பு, பண்டிதரின் துப்பாக்கிப் பட்டாளம் உங்கள் கணவன்மார்களைச் சுட்டுக் கொன்று அதைப் பறித்து விடும்- என்று உங்களுக்கு உணர்த்துவது கண்ணியமற்ற செயலாம்! பாவம்; கண்ணியம் என்ற பதத்திற்கே பொருள் தெரியாதவர்களாகிவிட்டார் கள் அவர்கள்! அதிகார ஆணவம் அவர்களை அம்மாதிரி ஆக்கி விட்டது'

தாய்மார்களே! முசார்பூர் விதவைப் பெண்மணியின் நிலைமை உங்களுக்கும் நாட்டிலேயுள்ள உங்கள் சகோதரிகளுக்கும் ஏற்படா திருக்க இப்போதே அணை கோலிக் கொள்ளுங்கள்! மாட்டுப் பெட்டி யிலே ஓட்டளித்தால் உங்கள் 'தாலி பாக்கியத்திற்கு' ஆபத்து என் பதை இப்போதே உணர்ந்து கொள்ளுங்கள்! ஃ

அன்புள்ள பொன்முடி,

தேர்தல் நெருங்க நெருங்க வாக்காளர்களை எந்த விதத்திலெல்லாம் கவரலாம்-என்பதிலே அக்கரையுடனும் அவசரத்துடனும் திட்டம் தீட்டி; செயலாற்றுவதிலே முனைந்திருக்கிறது, காங்கிரஸ் கட்சி!

காங்கிரஸ் வாதிகள் காரியவாதிகள் என்பதுதான் நாடறிந்த உண்மையாயிற்றே! இதுவரை, சுதந்தரம் வாங்குவதற்கு முன்பு தெருக்களிலே தேனாறு பெருக்கெடுத்தோடும்—என்று கூறி பாமர மக்களின் பச்சை மனதைச் சூறையாடிக்கொண்டு வந்தனர்.

சுதந்தரம் வந்துதான் ஆண்டுகள் பல உருண்டோடி விட்டனவே; எங்கே தோழனே தேனாறு-என்ற கேள்விக்கணை வெடித்து வருவது கண்டதும்; இனிமேல் போலி வாக்குகள் பயன் தராது-என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டனர்! அதனால்தான் பொன்முடி, தேர்தல் முடிந்து விட்டால் ஆளும் கட்சியினரை அண்ட முடியாது-என்கிற உண்மை உதய சூரியன்போல் எல்லோருக்கும் தெளிவாகி விட்டது!

ஆனால் அரை நூற்றாண்டிற்கும் மேலாக போர்க்கொடியை உயர்த்திக் கொண்டிருக்கும் நாட்டவரின் பரிதாபத்திற்கும், நமது அனுதாபத்திற்கும் உரிய இந்த என். ஜி. ஓ. க்களின் நிலைமையிலேதான் எந்தவித மாற்றமும் இல்லாமல் இருந்து வருகிறது!

ஆனால் இன்னொன்று பொன்முடி! எந்தவித போராட்டமும் இன்றி; சொல்லப் போனால் கத்தியின்றி இரத்தமின்றி 1,70,000 கெஜட் பதிவில்லாத ரயில்வே ஊழியர்களுக்கு உயர்ந்த ஊதியமும்; உத்தியோக உயர்வுக்காக நிறைந்த வாய்ப்புகளும் கிடைத்திருக்கின்றன. இதில் குறிப்பாக 23 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஸ்டேஷன் மாஸ்டர்களும், உதவி ஸ்டேஷன் மாஸ்டர்களும் பலன் பெறுகிறார்கள்.

இதுவரை இருபது ஆண்டுகள் அவர்கள் அந்தத் துறையில் பணியாற்றி வந்த போதும்கூட; அந்த நீடித்த பணிக்கு உரிய ஊதிய உயர்வைப் பெற்றார்கள் இல்லை! இருபது ஆண்டு 'சர்விசு'க்குரிய ஸ்டேஷன் மாஸ்டர் இருநூறு ரூபாய் சம்பளத்தைத்தான் எட்டிப் பிடிக்க முடிந்தது! இப்போது இவர்கள் உயர் பதவி அடைவதற்கான வாய்ப்புகள் மூன்று மடங்கு அதிகமாக்கப் பட்டிருக்கின்றன!

அருமையான ஏற்பாடு இது என்பதையும்; பல நாட்களாகவே கெஜட் பதிவு இல்லாத ரயில்வே ஊழியர்களது உள்ளத்திலே குமுறிக் கொண்டிருந்த எண்ணங்களின், ஒரு மித்த விளைவுதான் இது என்பதையும் யாரும் மறுக்க முடியாது!

முன்னைவிட இப்போது அந்த ஊழியர்கள் அதிகமாக பணி புரிகிறார்கள்; அதிகமாகப் பாடுபடுகிறார்கள்! அவர்களது உழைப்பிற்குத் தகுந்தாற்போல் முன்னமேயே அரசாங்கம் அதிக ஊழியத்திற்கு ஏற்பாடு செய்திருக்க வேண்டும். ஒட்டு வாங்கும் நேரத்திலாவது இவர்களுக்கு இரக்கம் வந்ததே என்று எண்ணி மகிழ்ந்திடும் தோழர்களோடு நம் மகிழ்வும் சேர்ந்து பெருகுவதில் வியப்பேதுமில்லையே!

ஆனால், பொன்முடி, இந்த உவகைப் பெருக்கில் கலந்து கொள்ள முடியாத பாவியாக இருக்கிறார்களே, இந்த மாநிலத்து என். ஜி. ஓ. க்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது!

நாங்கள் வாங்குகிற சம்பளம் வாங்கிய கடனை அடைப்பதற்கே போதவில்லையே— என்று கல்லும் கரைந்திடும் விதத்திலே ஆட்சி பீடத்தை நோக்கி அறைகூவல் விடுத்து வருகிறார்கள், அவர்கள்!

இன்சூரன்ஸ் ஊழியர்களும் இதே நிலையில்தான் கதறிக் கொண்டிருக்கிறார்கள்!

ஆனால் இவர்கள் குரலையெல்லாம் புறக்கணித்துவிட்டு அமைதியுடன் அரசோச்சி வருகின்றனர், ஆளும் கட்சியினர்!

இருந்தும் அந்தப் போராட்டத்தில் பின் வாங்காமல், தங்கள் கோரிக்கை பொது மக்களிடையே பரவுவதற்கு அவர்கள் ஒரு நல்ல முடிவைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்!

ஆளும் வர்க்கத்தவரின் கையாலாகாத்தனத்தை விளக்கிடும் விதத்தில், 'ஆட்சியாளரால் புறக்கணிக்கப்பட்ட சென்னை மாநில என். ஜி ஓக்கள்' என்று பொறிக்கப்பட்ட சின்னத்தை 26-ம் தேதி முதல் மார்ச் 15-ம் தேதிவரை அவர்கள் அணிந்து கொள்வதென்று தீர்மானித்திருக்கிறார்கள்!

அரசாங்கத்தின் மெய்மறந்த போக்கினைக் கண்டனம் செய்யும் முறையில் வருகிற 25-ம் தேதியன்று ஒரு மணி நேரம் அலுவலகத்திற்குச் செல்வதில்லை — என்று ஒரு அங்கத்தினர் கொண்டு வந்த தீர்மானமும் என். ஜி. ஓ. மத்திய சங்கத்தினரால் ஆலோசிக்கப்பட்டிருக்கிறது!

நல்ல முடிவு; நாட்டையும் ஏட்டையும் ஒருங்கே கவர்ந்துவிடும் புதிய முடிவு — இது என்பதை எல்லோருமே புரிந்து கொண்டிருக்கிறார்கள்!

அன்புள்ள பொன்முடி! உவமையொன்று கூறுவார்கள், நீ கேட்டிருக்கிறாயா?

நேர்மையற்றவர்கள்; நீதிக்குக் கட்டுப்படாதவர்கள் ஆளும் கட்சியினராய் இருப்பார்களேயானால் அவர்களிடம் பிரச்னையைச் சாதித்துக் கொள்வதற்கு பாதிக்கப்பட்டவர்கள் ஒரு புத்திசாலிப் பெண்ணைப் போல் நடந்துகொள்ள வேண்டும்!

திறமையுள்ளவள் கட்டிலறையிலே காதலனுக்கு இன்பத்தை வாரி வழங்குவதற்கு முன்பு; அவனிடமிருந்து பெற வேண்டியவைகளைப் பெற்று விடுவாளாம்!

இரவு வீணாகிறதே-என்ற கவலையில் அந்தக் காமுகனும் அவளது கோரிக்கைகளுக்குக் கட்டுப்பட்டு விடுவானாம்!

அன்புள்ள பொன்முடி! புத்திசாலிப் பெண் எவ்வாறு பொழுது விடிவதைக் காட்டி பயமுறுத்தி, காரியத்தைச் சாதித்துக் கொள்ளுகிறாளோ, அதுபோலத்தான் தேர்தல் நெருங்குவதைக் காட்டி என். ஜி. ஓ. க்களும் மேற்கொண்ட முயற்சியில் வெற்றி பெறுவது பற்றி முடிவெடுக்க வேண்டும்!

இந்த முறை தவறினால்— இந்தத் தேர்தல் காலத்தைத் தவற விட்டால்—இன்னும் ஐந்தாண்டு காலத்திற்கு இவர்கள் கோரிக்கையைக் கேட்பதற்கே நேரமிருக்காது, நமது காங்கிரஸ் அமைச்சர்களுக்கு!

இந்த விதத்தில் 25-ம் தேதியன்று ஒரு மணி நேரம் வேலை நிறுத்தம் செய்வது பொது மக்கள் மனதைக் கவர்வதற்கும்; தேர்தல் நேரத்திலே ஆளும் கட்சியினரைக் கடைசி முறையாக அதட்டிக் கேட்பதற்கும் அருமையான சந்தர்ப்பம்!

நல்ல தருணம் இது; இதை நழுவவிடிலோ இதுபோல் பிறிதொரு தருணம் வாய்க்காது என்பதைத்தான் போராடிக் கொண்டிருக்கும் என். ஜி. ஓ. நண்பர்களுக்கு எடுத்துக்கூற ஆசைப்படுகிறோம்.

இங்ஙனம்,

உன் அன்புத் தோழன்

மார்ச் முதல் வாரம் கிடைக்கும்!

சத்தான கருத்துரைக்கும்

முத்தாரம்

★ 'பழிக்குப் பழி!'--மேரி காரல்லியின் பெருங்கதை சுருக்கித் தரப்படுகிறது!

★ 'இரும்பு முகமூடி!'--பிரெஞ்சு நாட்டுப் பேராசிரியர் அலெக்சாண்டர் டூமாஸ் எழுதிய உன்னதக் காவியம் சித்திரத் தொடர் கட்டுரையாகத் துவங்குகிறது!

இன்னும்

சிந்தைக்கு விருந்தளிக்கும் சிறுகதைகள்!

கருத்தைக் கவரும் கட்டுரைகள் பல உண்டு!

உங்கள் பிரதிக்கு இன்றே விற்பனையாளரிடம் சொல்லி வையுங்கள்!

கண்ணீர்த்துளிகளை ஒழிப்போம்!

மு. கருணாநிதி

ஆசிரியர் மு.க. அவர்கள் குளித்தலைத் தொகுதியில் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம் இங்கே தரப்பட்டிருக்கிறது!

இதற்கு முன் கருணாநிதியாக வந்திருக்கிறேன். இப்போது தி. மு. க. அபேட்சகனாக, பொதுத் தேர்தலில் போட்டியிடுபவனாக வந்திருக்கிறேன். குளித்தலைத் தொகுதிக்கு நிற்கும் அபேட்சகர்களாக முதலில் என்னை நீக்கி பதிமூன்று பேர்கள் பணங்கட்டினார்கள். நான் வெற்றிபெற வேண்டுமென்ற நல்ல எண்ணத்துடன் மூவர், தாம் போட்டியிடுவதில்லையென்று முடிவு செய்து விலகிக் கொண்டார்கள். இப்போது இத்தொகுதியில் மொத்தம் பதினொரு பேர்கள் போட்டியிடுகின்றோம். அதிலே கட்சி சார்பென்று கூறுவதானால் காங்கிரஸ் கட்சி ஒன்று, தி. மு. கழகம் ஒன்று—ஆக இரண்டு கட்சிகள் தாம்! மற்றவர்கள் அத்தனை பேர்களும் சுயேட்சை! அதிலும் கருணாநிதியைத் தோற்கடிக்க வேண்டுமென்ற காங்கிரசின் குறிக்கோளுக்குத் துணை நிற்பவர்கள் ஆம், மகா விஷ்ணு என்பவர் தசாவதாரம் எடுத்தாராமே, அதைப்போல் காங்கிரஸ் தசாவதாரம் எடுத்து என்னுடன் போட்டி போடுகிறது.

கனம் நேரு அவர்கள் சென்னைக்கு வந்து தேர்தல் பிரச்சாரத்தைத் துவக்கி வைத்துள்ளார். சிங்காரச் சென்னையிலே அலங்கார மேடைமீது ஆயிரமாயிரம் மக்கள் கூட்டத்தில்—தேர்தல் பிரச்சாரத்தைத் துவக்கி வைத்தார். காங்கிரஸ் காளைமாட்டுப் பெட்டியில் ஓட்டுப் போடுங்கள்—என்று கூறுவதற்கு மட்டும் லேடி மவுண்ட் பேட்டனுடன் வந்து விட்டார்—இந்த நேரு! இப்போது வந்தவர் எப்போது வந்திருக்க வேண்டும்? 1952-ல் தஞ்சை, திருச்சி பகுதியில் பெரும் புயல் அடித்தபோது வரவில்லை! மறுபடி புயல் வீசியபோதும் வரவில்லை! அரியலூரில் ரயில் கவிழ்ந்தது: மக்கள் மருதையாற்றில் பிணமாக மிதந்தபோதும் வரவில்லை—ஆறுதல் தரவில்லை! ஆனால் இப்போது வோட்டு கேட்க வருகிறார். அவர் "1952-ல் புயல் ஏற்பட்டது என்று சொன்னார்கள்—அதன் பின்பும் மறுபடியும் புயல் வீசியது என்றும் சொன்னார்கள்—அரியலூர் ரயில் விபத்தில் ஏராளமானவர்கள் மாண்டார்களென்றும் கேள்விப்பட்டேன்; கேள்விப்பட்டேன்; நாமென்ன செய்ய முடியும்? ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ மாநிலத்தீர்; வேண்டாம் நமக்குமது வழியே போமளவும் நமக்கென்னவென்று காளைமாட்டுப் பெட்டிக்கே வோட்டிட்டு ஓதுங்கி வாழ்வீரே" எனக் கூறுகிறார்.

31—1—57 மாலை 7 மணிக்கு மகத்தான தேர்தல் வெற்றியை தி. மு. கழகம் பெற்றேவிட்டது. 'திராவிடம்' என்ற சொல்லைத் தம் வாயால் கூறுவதே பாவம்; கூறிய நாக்கைக் கங்கா ஜலங்கொண்டு கழுவ வேண்டுமென்றெல்லாம் கருதிய நேரு 'இங்கே திராவிடக் கழகங்கள் நாட்டைப் பிரிக்க வேண்டுமென்று கூறுகின்றனவாம்—நான் அதற்குக் கடுகளவுகூட இடந்தர மாட்டேன். அடக்கிவிடுவேன்' என்றாராம்! அவருடைய அரசியல் அதிகார வாழ்வில் அவர் முதன் முறையாக திராவிடக் கழகமென்று கூறியது 31-1-57 மாலைதான். இது தி. மு. கழகத்தின் மாபெரும் வெற்றி. இந்த நேரத்தில் ஒன்று குறிப்பிட விரும்புகிறேன்; 'திராவிட......என்று நேரு கூறித் துவக்கும்போது, எங்கே திராவிடக் கழகம் என்று கூறிவிடுவாரோ—அதனால் பெரியார் அவர்களின் அன்பு குறைந்துவிடுமோ என்ற கருதிய காமராசர், 'முன்னேற்றக் கழகம்; முன்னேற்றக் கழகம்' என்று கூறினாராம்!

சிலர் கூறுவதுபோல ரூபாய் நூற்றைம்பதுக்கு ஆசைப்பட்டோ அல்லது எம். எல். ஏ. எனும் பட்டத்தை விரும்பியோ தி. மு. கழகம் தேர்தலில் போட்டியிடவில்லை. கடந்த ஒன்பது ஆண்டு காலமாக காங்கிரசாட்சியால் ஏற்பட்டுள்ள கேடுகளை நீக்கி, ஒளி விளக்கு ஏற்றவே தேர்தலில் போட்டியிடுகிறது. 1947-ம் ஆண்டு ஆகஸ்டு, 15-ம் நாள் நள்ளிரவு பனிரெண்டு மணிக்குமேல் டி. கே. பட்டம்மாள் 'ஆடுவோமே பள்ளு பாடுவோமே' எனப் பாட, கதர் சட்டைகள் கைத்தாளம் போட, குமாரி கமலாக்கள் ஆட வெள்ளையர்களை வெளியேற்றி விட்டோம்; இனித் தேனாறும்—பாலாறும் ஓடும் என்று கூறினார்கள். தேனாறு ஓட வேண்டாம்; இங்குள்ள மருதையாறு பிணஆறாகா திருந்தால் போதுமென்கிறோம். அரியலூரில் ரயில் கவிழ்ந்ததற்கு யார் பொறுப்பாளி? காங்கிரசு நம்மை ஆள்கிறது; நமது உயிருக்கும் உடமைக்கும் உத்திரவாதமிருக்கிறது என்று எண்ண முடியவில்லையே! அன்றொரு நாள் சென்னை எழும்பூர் புகைவண்டி நிலையத்தில் நூற்றுக்கணக்கில் தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் புகை வண்டியேறியவர்கள் என்ன நினைத்திருப்பார்கள்? நமது உயிருக்கும் உடமைக்கும் சர்க்காரிருக்கிறது பாதுகாப்பளிக்க; நாம் காலையில் ஆறுமணிக்கெல்லாம் திருச்சி சென்றுவிடுவோம்; நண்பர்களைப் பார்ப்போம்; உற்றார் உறவினர்களைக் காணுவோம் என்றுதானே நினைத்திருப்பார்கள்? பதினொரு மணிக்குத் தூத்துக்குடி செல்வோம் என்றெல்லாம்தான் எண்ணியிருப்பார்கள்! நடந்தது என்ன? இந்த சர்க்காரின் கவனக் குறைவால் இறந்தவர்கள் எத்தனையோ பேர்கள்! சர்க்கார் கணக்குப்படி 153 பேர்கள்! பொதுமக்கள் கணக்குப்படி 500 பேர்கள்! இந்த ஆட்சியில் ஒன்பதாண்டு காலமாக நாம் அனுபவித்த துன்பப் பட்டியல்கள் அதிகம்! இந்த ஆட்சி நீடிக்க விருப்பமேற்படுமா?

உணவு இல்லையே யென்று முன்பு மந்திரி முன்ஷியைக் கேட்டோம். அரிசி இல்லையென்றால் கோதுமையைச் சாப்பிடுங்கள் என்று கூறினார். அதுவும் கிடைக்கவில்லை அப்பனே என்று கேட்டோம். பிண்ணாக்கைச் சாப்பிடுங்கள் என்றார். திண்டுக்கல்லுக்குப் பக்கத்தில் எட்டுப்பேர்கள் ஒன்றும் கிடைக்காத காரணத்தால் கத்தாழைக் கிழங்கை வெட்டித் தின்றார்கள். அதிலே விஷம் கலந்திருந்ததால் ஆறு பேர்கள் சுருண்டு விழுந்து செத்தார்கள், இவர்களாட்சியிலே! இப்படி எத்தனை உயிர்களைத்தான் காங்கிரஸ் காணிக்கையாக ஏற்றுக்கொள்வது?

தறிகாரர் குடும்பங்களின் இன்னல்கள் எவ்வளவு? எத்தனைத் தாய்மார்கள்—இரத்தினங்களை — மாணிக்கங்களை — பிள்ளையோ பிள்ளை என்று இரண்டு ரூபாய்க்கும், ஒரு ரூபாய்க்கும்—கீரையோ கீரை என விற்பதுபோல விற்றார்கள்! பசி தாங்க முடியாமல் ஆற்றிலும் கிணற்றிலும் எறியப்பட்ட குழந்தைகள்—வீழ்ந்துபட்ட பெற்றோர்கள் எவ்வளவு பேர்கள்? தெருத் தெருவாக அலைந்த குடும்பங்கள் கணக்கிலடங்குமா? அவர்கள் துயரை — கண்ணீரை ஓரளவு துடைத்தவர்கள் தி. மு. கழகத்தவர்களாகிய நாம்தான். தறிகாரர்களுக்கு உதவப் பணமில்லையென்று பஞ்சப்பாட்டுப்பாடும் இந்த சர்க்கார்தான் மந்திரிகளுக்கு 1500 ரூபாய் மாதச் சம்பளம்; அதுபோக படி—கவர்னருக்கு ஆண்டு ஒன்றுக்கு பதினொரு லட்சம் ரூபாய்கள் சம்பளம் என்று வாரி இறைக்கிறது. இப்படி கொழுத்த சம்பளம் வாங்குகிற கவர்னரின் வேலை என்ன தெரியுமா? கிண்டிப் பந்தயத்தில் ஜெயித்த குதிரைக்கு கவர்னர் கப் வழங்குவது—ஏதாவது நாட்டியக் கச்சேரி போன்ற நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்குவது—இதற்காகத்தான் அத்தனை லட்ச ரூபாய்கள் சம்பளம்! அதே நேரத்தில் அவதிப்படுவோர் துயர் துடைக்க, உழைப்பவர்களின் ஊதியத்தை உயர்த்த சர்க்காரிடம் பணமில்லையாம்!

பெரிய பெரிய வரிகள் எல்லாம் வடநாட்டிற்கே செல்லுகிறது. கலால் வரி, சுங்கவரி, மரண வரிகளையெல்லாம் வடநாட்டிற்குக் கொடுக்கிறோம். தட்டிக் கேட்காது அவர்கள் குட்டக் குட்டக் குனிந்து கொடுப்பதால்தான் அவர்கள் நம்மைப் பற்றிக் கவலைப்படாமலிருக்கிறார்கள். நாம் வாங்கும் ரயில் டிக்கட் பணத்தில் பெரும்பகுதி வடநாட்டிற்குச் செல்லுகிறது. தபாலாபீசிலே வாங்குகிற தபாற் தலைகளின் பணம் வடக்கேதான் போகிறது. முதல் ஐந்தாண்டு திட்டத்திலும் சரி, இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலும் சரி, வடக்கே கோடிக் கணக்கான பணம் செலவிடப்படுவதும், தென்னாட்டிற்கு லட்சக் கணக்கில்தான் செலவிடப்படுவதும் நாடு அறிந்தது. இத்தகைய ஓரவஞ்சனையை மாற்றுவதற்காகவே தி. மு. கழகம் போர்க் கொடியை உயர்த்தியிருக்கிறது. மந்திரி பக்தவத்சலமும், சுப்பிரமணியமும் சென்று 'அரகர மகாதேவா! அப்பனே! கோவிந்தா! வேல் முருகா! இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் 400 கோடி ரூபாய் கொடு' என்று இறைஞ்ச—ஏன் 200 கோடி போதாதாவென்று நேருபெருமான் கேட்க—தங்கள் சித்தம் எம்பாக்கியம் என்று இவர்கள் கூற—பின் 170 கோடி தருவதாக ஆகி; அதிலும் தேய்பிறை படர்ந்திருக்கிறது. இந்த இழி நிலையை மாற்றியமைக்க வேண்டாமா? நம் வரிப்பணம் எவ்வாறெல்லாம் பாழாகிறது தெரியுமா? கணக்குப் பரிசீலனைக் குழுவினர் கண்டுபிடித்து புள்ளி விவரத்துடன் வெளியிட்டார்களே!. காஷ்மீருக்கு 8 லட்சம் கொடுப்பதற்குப் பதிலாக 80 லட்சம் கொடுக்கப்பட்டதாம். கூட்டுப் புள்ளியில்

* தொடர்ச்சி 8-ம் பக்கம்



டெல்லி மன்னன் பெரோஸ் ஒரு விந்தை மனிதன். கோலேந்திக் கோமானாகக் கொலு வீற்றிருந்தானே தவிர; ஆட்சி முறை பற்றியோ காவலனின் கடமை பற்றியோ அவன் ஏதும் அறியான். ஆனால் அவன் அப்பாவியும் அல்ல.

மண்டலத்தை ஆளும் முறை தெரியாதே தவிர மான் விழியோரை மயக்கும் முறையும், மதுக்கோப்பைகளைத் தரம் அறிந்து பருகும் தன்மையும் அறிந்தவன். அரசன் சிற்றின்ப லோலனாகவே, ஆட்சியில் ஊழல் மலிந்தது; பிரபுக்கள் பேயாட்டம் போட்டனர்; ஏழை மக்கள் அவதிக்கு ஆளாயினர்; அல்லற்பட்டு ஆற்றாது அழுதனர். அவரது கண்ணீர் கொற்றவன் கோல் சாய்க்கும் கூரிய வாளாயிற்று.

நாட்டில் புரட்சி முகிழ்த்தது. புரட்சிக்குப் பூவை யொருத்தி தலைமை தாங்கினாள். அவள் வேறு யாருமல்ல; பெரோஸின் உடன் பிறந்த தங்கை ருசியா பீகம்!

வளையல் குலுங்கும் கரங்களில் வாள் மின்னிற்று. அந்தப்புரத்தில் அழகுப் புறுவாக இருக்க வேண்டியவள், வல்லூறாக மாறி படைநடத்திப் புறப்பட்டாள். பெரோஸ் மன்னன் தோற்றான்; ருசியா பீகம் டெல்லி அரசியாக முடிசூடினாள்.

ருசியா அழகி மட்டுமல்ல; ஆடம்பரப் பிரியையும்கூட! திடமான நெஞ்சும், திட்டம் தீட்டி அதை நிறைவேற்றிடும் ஆற்றலும் அவளிடம் நிரம்ப உண்டு. பெண்மையின் அழகும் ஆண்மையின் கம்பீரமும் அவளிடம் ஒருங்கே இணைந்திருந்தன. பெண்ணொருத்தி அரசியாவதைப் பிரபுக்களில் சிலர் விரும்பாதிருந்தாலும், ருசியாவின் இளமை மெருகேறிய அழகும், தெளிந்த அறிவும், திண்ணிய உள்ளமும் அவர்களுக்கு அவளிடம் ஒருவித அச்சத்தைத் தோற்றுவித்திருந்தது.

அன்று டெல்லி நகரமே விழாக்கோலம் கொண்டிருந்தது. ருசியா பீகம் அரசியானதை முன்னிட்டு கேளிக்கைகளும் விருந்துகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

அந்த விழாவில் ஒரு நிகழ்ச்சி. சுற்றிலும் இரும்புக் கம்பிகளால் அமைக்கப்பட்ட மைதானம் ஒன்று. அங்கே பல நாள் பட்டினி போடப்பட்ட பிரம்மாண்டமான காட்டெருமையொன்று அவிழ்த்துவிடப் பட்டிருந்தது. அந்தக் காட்டெருமை பசி வெறியால் பயங்கரக் கூச்சலிட்டுக்கொண்டு அங்குமிங்கும் ஓடியது. அதே சமயம் பட்டினி போடப்பட்ட சிறுத்தையொன்று அந்தமைதானத்தில் கொண்டு விடப்பட்டது. சிறுத்தையும் காட்டெருமையும் ஒன்றோடொன்று பொருதின.

இந்த பயங்கரமான மிருகச் சண்டையைப் பல்லாயிர மக்கள் பார்த்து மகிழ்ந்தனர். அரசி ருசியா பீகமும் பாதுகாப்பான இடமொன்றில் அமைக்கப்பட்ட மேடையின்மீது பணிப்பெண்கள் புடைசூழ அமர்ந்து இந்த மிருகப் போராட்டத்தைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள்.

சிறுத்தை காட்டெருமையின் மீது ஆவேசத்தோடு பாய்ந்தது. காட்டெருமையோ, சிறுத்தையைக் கொம்புகளால் தூக்கியெறிந்துவிட்டு, கால்களால் தரையைக் கிறிய படியே கொம்புகளை ஆட்டிக் கொண்டு அங்குமிங்கும் சீறி ஓடியது.

பசிகொண்ட சிறுத்தை காட்டெருமையைக் கொல்ல எவ்வளவோ முயன்றும், முடிவில் காட்டெருமையே வென்றது. தரையோடு தரையாக சிறுத்தையைக் கொம்பினால் குத்திக் கிழித்தெறிந்தது. வெற்றியின் மமதையாலோ என்னவோ கோரமாக கத்திக்கொண்டே வாலைச் சுழற்றி அங்குமிங்கும் பாய்ந்தது!

"பமீயா, பார்த்தாயா அந்த எருமைக்குள்ள பலத்தை...... பலம் பொருந்திய சிறுத்தையை நொடிப்பொழுதில் மண்ணோடு மண்ணாக்கிவிட்டதே," என்று அரசி ருசியா பீகம் அவளுடைய அன்புக்குப் பாத்திரமான பணிப்பெண் பமீயாவிடம் ஆச்சரியத்தோடு கூறினாள்.

காட்டெருமையின் மீது வைத்த வழி வாங்காமலேயே, "ஆமாம்" என்று தலையசைத்தாள் அழகி பமீயா.

பமீயா, பதினாறு பிராயம் கூடப் பூர்த்தியாகாத பணிப்பெண். அரண்மனையில் அரும்பு நிலையிலிருந்து இப்பொழுதுதான் அவள் மலராகிக் கொண்டிருந்தாள். அரசியிடம் அவளுக்கு நல்ல செல்வாக்கும் இருந்தது.

அரசியும் பமீயாவும் இப்படிப் பேசிக்கொண்டிருக்கும் பொழுதே, காட்டெருமை சுற்றிடும் வளையத்தில் கையில் கட்டாரியோடு ஒரு வாலிபன் தோன்றினான். ஆண்மைக்கு இலக்கணம் வகுத்ததுபோன்றிருந்த அவன் உடல், பண்டைய கிரேக்கத்தின் வலிவும் வனப்பும் கொண்ட புராண வீரர்களை நினைவுபடுத்தியது. தன்னுடைய பலத்திற்குச் சவால் விட்டு நிற்கும் அந்த வீரனைப் பார்த்தவுடனேயே காட்டெருமை வெகுண்டு அவனை நோக்கிப் பாய்ந்தது. வீரனோ, சற்று விலகினான். பாய்ந்த வேகத்தில் காட்டெருமை மண்டியிட்டுக் கீழே விழுந்தது. உடனே வீரன் விரைந்து தாவி அதன் கொம்புகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான். ஆனால் எருமையோ அவனையும் இழுத்துக் கொண்டு சீறிப் புறப்பட்டது. வீரனும் விடவில்லை. கொம்புகளைக் கெட்டியாகப் பிடித்தபடியே கட்டாரியால் அதன் கழுத்தில் குத்தினான். காட்டெருமை மலைபோல் கீழே சாய்ந்தது.

மக்கள் கையொலி எழுப்பி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். வீரனோ கண்களில் பெருமிதம் ஒளிவீச அரசியின் முன்சென்று தலைவணங்கினான்.

வீரத்தின் சின்னமாகக் காட்சியளித்த அந்த வீங்கு தோள்களை சற்று நேரம் இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் அரசி! பிறகு ஏதோ நினைத்துக் கொண்டவள்போல் கழுத்திலிருந்த முத்துமாலை யொன்றைக் கழட்டி அலட்சியமாக அவன் முன் வீசியெறிந்தாள்.

மண்டியிட்டபடியே, மாலையைக் கையில் ஏந்திக்கொண்டான் வீரன். நன்றியுணர்ச்சியோடு மீண்டும் ஒருமுறை அரசியை வணங்கிவிட்டுக் கூட்டத்திற்குள் சென்று மறைந்தான் அந்த வாலிபன்.

"பமீயா......!" என்றாள் அரசி.

பமீயாவோ வாலிபன் சென்ற திக்கையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்!

* * *

இரவு!

நீல விதானத்தில் வெள்ளித் தட்டாகத் தொத்திக் கிடந்தது நிலா!

மஞ்சத்தில் சயனித்துக் கொண்டிருந்தாள் அரசி ருசியா பீகம்! ஹுக்காவிலிருந்து புகை கிளம்பிக் கொண்டிருந்தது சிந்தனையின் ஆழத்தில் சலனமிடும் எண்ணங்களின் ரேகை விழிகளில் வெளிப்பட்டு நின்றது.

அவளுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை; மெதுவாக நிலா முற்றம் சென்று உலாவினாள். குளிர் பொழியும் நிலவிலும் கொந்தளிக்கும் அவள் உள்ளம் சாந்தியடையவில்லை.

அந்த வாலிபன்......இளமையின் திமிர் வெளிப்பட்டு நிற்கும் அந்த உடற்கட்டு...... பொங்கிவரும் அபாயத்தையும் பொருட்படுத்தாத அந்த அலட்சியப் புன்னகை......பெண்மையின் கனவுகள் எல்லாம் ஓர் உருப்பெற்று வந்த அந்தப் பேரழகன்...... ருசியா பீகம் மனத் திரையில் ஓவியம் தீட்டித் தீட்டிக் கலைத்துக் கொண்டிருந்தாள்.

அரசியானாலும் பணிப்பெண் ஆனாலும் ஆசைகளுக்கு அந்தஸ்து பேதம ஏது? வேதனைப்படும் அரசிக்கு மட்டும் இந்த உண்மைகள் புரிந்தால் போதுமா? மதமும், அதன் அரவணைப்பிலே வளர்ந்த சடங்கு—பழக்க வழக்கங்களும் அதை அனுமதிக்க வேண்டுமே!

அந்த வாலிபன் ஒரு அடிமை —அபிசீனிய அடிமை!

எவ்வளவு கசப்பான உண்மை! அவன் மட்டும் இளவரசனாயிருந்தால்......

காட்டில் மலர்ந்தது என்ற காரணத்திற்காக ரோஜாவிற்கு அழகில்லை என்று சொல்லுவதில் விவேகம் இருக்க முடியுமா? மனித வாழ்க்கையே தர்க்க ரீதியில் அமைந்து விட்டால், பிறகு உலகில் என்ன கஷ்டமிருக்கிறது?

அரசி தத்துவ விசாரணையில் ஈடுபட்டாள்!

"யாகூத்!"—எவ்வளவு அழகான பெயர். சொல்லிப் பார்த்தாள்—சுவைத்துப் பார்த்தாள், மீண்டும் மீண்டும் அந்தப் பெயரை.

காட்டெருமையை வெட்டி வீழ்த்திய அந்த அபிசீனிய அடிமையின் பெயர்தான் யாகூத்!

பெயரிலே என்ன இருக்கிறது என்றுதான் சொல்லியிருப்பாள் இதற்குமுன் கேட்டிருந்தால்! ஆனால் அந்தப் பெயரில் எத்தனையோ இன்பங்கள்; நிறைவேறாத — நிறைவேற்ற முடியாத ஆசைகளல்லவா தொக்கி நிற்கின்றன.

தவிர, யாகூத் அரசாங்கத்திற்குச் சொந்தமான அடிமை!

இந்த விவரங்களை யெல்லாம் சாதாரணமாகக் கேட்பது போலவே கேட்டுத் தெரிந்து கொண்டு விட்டாள்.

அவள் அரசி — அவன் அடிமை! அவள் ஆணையிட்டால் அவன் அதை நிறைவேற்ற வேண்டும்.

அவள் ஆணையிடவும் அவன் அதைக் கேட்கவும் அரசியல்—மதம் எல்லாம் இடம் அளிக்கும்.

சட்ட ரீதியான முறைகளில் அவள் ஆசை நிறைவேற முடியாது.

காரணம், அவள் அரசி—அவன் அடிமை. ஆனால் சட்ட வரம்பற்று நிறைவேற்றப்படும் ஆசைகள் இன்பம் பயக்காதா என்ன?

அரண்மனைச்சேவகம் புரியும் அடிமைக்கு அந்தப்புரத்தில் வேலை கொடுத்துவிட்டால்...... ஆம், நாளையிலிருந்து யாகூத் அரசியின் அந்தப்புரத்தில் ஆணை கேட்டு நடக்கும் பணியாளாக நியமிக்கப்படுவான்!

ருசியா பீகத்தின் உதடுகள் மலர்ந்தன. திருப்தியோடு பெருமூச்சு விட்டாள். எந்த முடிவைச் செய்தாலும் அதை பணிப் பெண் பமீயாவிடம் தெரிவிக்காவிட்டால் அரசிக்கு மண்டை வெடித்துவிடும். பமீயாவின் அறைக்கு ஓடினாள்.

"பமீ! பமீ!" என்று உரத்தக் கத்தினாள், அவள் தூங்கியிருப்பாள் என்று நினைத்துக் கொண்டு.

ஆனால் பமீயாவும் தூங்கவில்லை.

"ஏன் பீகம்?" என்று எழுந்தாள் பமீயா.

"நீ தூங்கியிருப்பாய் என்றல்லவா நினைத்தேன்," என்றாள் அரசி.

"எங்கே பீகம் தூக்கம் வருகிறது? காட்டெருமையும் சிறுத்தையும் கண்ணை மூடியவுடனேயே வந்து பயமுறுத்துகின்றன..."

"பிறகு?..."

"பிறகென்ன? யாகூத் வந்து......நான் சொல்லமாட்டேன்," என்று முகத்தைக் கைகளால் மறைத்துக் கொண்டு கள்ளமற்ற உள்ளத்தோடு கலகலவென்று நகைத்தாள் பமீயா!

அரசி இந்தச் சிரிப்பை அவ்வளவாக ரசிக்கவில்லை!

"பமீயா, பைத்தியம் மாதிரி உளருதே! யாகூத் அடிமை—ஆனால் நீ அரசி ருசியா பீகத்தின் பணிப் பெண். தவிர, நீ இன்னும் குழந்தை மாதிரிப் பேசிக் கொண்டிருக்காதே! தூங்கு..." என்று கூறிவிட்டு சொல்ல வந்ததைச் சொல்லாமலேயே அறையை நோக்கி நடந்தாள் அரசி.

2

மறுநாள் காலை; அரண்மனைத் தோட்டத்தில் அடிமை யாகூத் வேலை செய்து கொண்டிருந்தான். காலை யிளஞ் சூரியனின் கதிர்கள் உடையணியாத அவன் மார்பினை உருக்கி வார்த்த தங்கம்போல் பிரகாசிக்கச் செய்தன. உடலெங்கும் வியர்வை அரும்பி, சூரிய ஒளியில் முத்துப்போல் மின்னிக் கொண்டிருந்தன.

முழு உருப் பெற்ற அந்த மேனி, காளையர்களையே கவர்ந்து விடுமென்றால் கன்னியர்களின் கண்களுக்கு விருந்தாவதில் வியப்பென்ன இருக்கிறது?

மலரெடுக்க வந்த பமீயா, அந்த அழகனைக் கண்டவுடன் தொலைவில் அப்படியே நின்று விட்டாள். மரத்தின் ஓரத்தில் பதுங்கியபடியே யாகூத்தின் அழகை திருட்டுத்தனமாக ரசித்தாள். மண்வெட்டி எடுக்கும்பொழுது கைகளில் உருண்டு திரளும் அந்தத் தசையழகு, மாசு மருவின்றி நிறைவுற அமைந்த உறுப்புக்கள், சிவந்த உதடுகளுக்குமேல் அரும்பி நிற்கும் அழகு மீசை—அவள் உள்ளம் அந்த அழகு வெள்ளத்தில் குளித்து மகிழ்ந்தது.

பமீயாவின் நிலைதான் இப்படியென்றால், யாகூத்தும் வேலையில் ஈடுபட்டிருந்தானே தவிர, அவனுடைய உள்ளமும் எங்கோ ஒரு இடத்தில் ஈடுபட்டுத்தான் இருந்தது. நேற்று அரசிக்கு அருகில் வீற்றிருந்தாளே ஒருத்தி, அவள் யார் என்ற வினா அவன் உள்ளத்தில் எழும்பிக் கொண்டிருந்தது. பனி மலர்க் கண்களும், பவளச் செவ்வாயும் பரவசச் சிரிப்பும் கொண்டு, நிலவுக்குப் போட்டியாக வீற்றிருந்த அந்தத் தாரகை யார் என்று அவனும் எண்ணமிட்டுக் கொண்டுதான் இருந்தான்.

மலர்க் கூட்டத்தைப் பார்த்தான்; அவள் புன்னகையை அது நினைவுபடுத்தியது.

மயில் சாயலையும், கிள்ளைகள் அவளது மழலையையும் அவனைக் கற்பனை செய்து பார்க்கச் செய்தன.

வானத்தில் செல்லும் நிலவை பூமியில் இருந்தபடியே எட்டிப் பிடிக்க நினைப்பது எவ்வளவு பேதமை என்பதை உணர்ந்தான். அவள் பணிப் பெண். ஆனால் யாருக்கு? எண்டிசையும் புகழ் பரப்பிக் கோலோச்சும் சக்ரவர்த்தினி ருசியா பீகத்திற்கு. அவன் அடிமை; இட்டபடி ஏவல் புரிபவன்; ஏன் என்று கேட்க உரிமையில்லாதவன்!

பெருமூச்சு விட்டுத் திரும்பினான் யாகூத்! கற்பனையில் கண்டு மகிழ்ந்த காரிகை, கையில் மலர்க் கூடையுடன் உயிர்ச்சிலையாய் நின்று கொண்டிருந்தாள்.

இருவரும் ஒருவரை யொருவர் ஒரு கணம் ஏறிட்டுப் பார்த்தனர். அவள் தலை கவிழ்ந்தாள். அவன் கரங்களிலிருந்து நழுவி மண்வெட்டி கீழே விழுந்தது!

"யாகூத் உன்னுடைய திறமையைப் பார்த்து பீகம் பிரமித்துப் போய்விட்டார்கள்... அவர்கள் யாருக்குமே இது வரை அவர்கள் அணிந்திருந்த முத்து மாலையைப் பரிசளித்ததில்லை..." என்று ஒவ்வொரு வார்த்தையாகப் பேசினாள் பமீயா.

யாகூத், அவள் பேச்சில் வெளிப்பட்ட விஷயத்தைவிட அந்தக் குரல் இனிமையிலும். அந்த இனிமைக்குச் சொந்தமான உருவத்திடமுமே அதிகமாக ஈடுபட்டிருந்தான்.

"நீங்கள்......"—யாகூத் பயபக்தியோடு பேசினான்.

"நான் பமீயா......பணிப் பெண்" என்று கேள்வி முடியுமுன்பே பதிலளித்தாள் பமீயா.

அதற்குமேல் என்ன பேசுவதென்றே இருவருக்கும் புரியவில்லை; ஒருவரை யொருவர் ஏறிட்டுப் பார்த்தனர். கண்கள் நான்கும் ஒன்றிக் கலந்தன. பமீயா, வேறொன்றும் பேசாமல் சுற்றுமுற்றும் பார்த்தபடியே புறப்பட்டாள்.

அவள் செல்லும் தூரத்தை விழிகளால் அளந்து கொண்டிருந்தான் யாகூத். அவள் மறைந்து விட்டாள். அவன் பெருமூச்சு விட்டான்.

அரசியின் பணிப் பெண் அவனிடம் வேலையில்லாமல் ஏன் நின்று பேசவேண்டும்? ஒரு பெண், அதிலும் பருவ வாயிலில் நிற்பவள், ஒரு வாலிபனிடம் காரணமில்லாமலா நின்று பேசி பாராட்டுரையும் வழங்குவாள்? யாகூத் சிந்தித்தான்.

வேலையில் அவன் மனம் ஈடுபடவில்லை. சூரியனே மெதுவாக வான வீதியில் ஏறிக் கொண்டிருந்தான்.

சற்று தூரத்தில் அரண்மனை அதிகாரிகள் இருவர் வருவதை யாகூத் கவனித்தான். வேகமாக எழுந்து மண்வெட்டியைக் கையில் எடுத்துக் கொண்டு வேலையில் ஈடுபட்டான். அதிகாரிகள் அருகில் வந்து நின்றனர்.

"யாகூத்!"

வேலை செய்யாமல் வீற்றிருந்ததற்கு என்ன தண்டனை கிடைக்கப் போகிறதோ என்ற பயத்தில், மண்வெட்டியைக் கீழே வைத்துவிட்டு அவர்களுடைய கால்களைத் தொட்டுக் கும்பிட்டான்.

"பீகம் சாகியா உன்னைப் பார்க்க வேண்டுமாம்; உடனே அழைத்துவரச் சொன்னார்கள்," என்றான் ஒரு அதிகாரி.

"என்னையா......?" என்று நாக்குழறினான் யாகூத்.

"ஆமாம். சீக்கிரம் கிளம்பு. பீகம் காத்துக் கொண்டிருப்பார்கள்," என்றான் அதிகாரி.

அச்சம் மனதை அரிக்க அவர்களைப் பின் தொடர்ந்தான். ஒரு வேளை பணிப் பெண் பமீயாவிடம் அவன் பேசிக் கொண்டிருந்ததை யாராவது பார்த்துவிட்டு அரசியிடம் போய் சொல்லியிருப்பார்களோ; அல்லது பமீயாவே ......அவன் இருதயம் படபடத்தது; ஒருவாறு தன்னைத்தானே தேற்றிக்கொண்டு நடந்தான்.

(தொடரும்)

க. அன்பழகன் அறிவிப்பு

சென்னை. எழும்பூர் தொகுதியில் தி. மு. க. அபேட்சகனாகச் சென்னை சட்ட சபைக்குப் போட்டியிடுகின்ற என்னைப் பற்றி, எனக்கு அறிவிக்காமலும் என் அனுமதியின்றியும் வெளியிடப்படும் அறிக்கைகள், துண்டுப் பிரசுரங்கள் விளம்பரங்கள் முதலிய எவையும் என்னைக் கட்டுப்படுத்த மாட்டா என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை அன்பன்,
16–2–57 க. அன்பழகன்

கடைசிப்பக்கம்

எழுத்தாணி

வி. ராமசாமி; சென்னை.

(?) அடுக்கு மொழிகளால் ஆட்சியைப் பிடித்துக் கொள்ள முடியாது—என்று போளூரில் காமராசர் பேசியதாக 'மித்திரனில்' வந்திருக்கிறதே: அது பற்றி உங்கள் கருத்து என்ன?

நன்ருகப் படித்துப் பாரும்; அவரே அதை அடுக்கு மொழியில்தான் 'அ' வுக்கு 'ஆ' சேர்த்துக் கூறியிருக்கிருர்! பின்னர் ஏன் நாம் கவலைப் பட வேண்டும்!

எல். பக்கிரி: நாகூர்.

(?) தேர்தலில் கலந்து கொள்வதற்கு உங்களிடம் அனுபவம் இல்லை — என்று அமைச்சர்கள் கூறுகிருர்களே?

அனுபவம் இல்லாவிட்டால் என்ன; அவர்களிடம் இல்லாத அறிவு இருக்கிறதே, நம்மிடம்!

கே. எம். எஸ். பாலுசாமி; கோவை.

(?) பிரஜா சோஷலிஸ்ட்டுகள் யார்?

தங்களோடு கூட்டுச் சேராதவர்கள்மீது புழுதி வாரி வீசும் 'பெரிய மனசு' கொண்டவர்கள்தான் அவர்கள்!

வி. சந்தோஷம்; பெங்களூர்.

(?) திருமணமான பெண்கள் தாலி அணிந்து கொள்வதைப் பற்றிக் கவலைப்படாத தி. மு. கழகம் 'தாலி ஜாக்ரதை' என்று சுவரொட்டிகள் வெளியிடுவானேன்?

அந்த இடத்தில் தாலி என்பது பொன் சரட்டைக் குறிக்குமே யொழிய, தாலியின் தாத்பரியத்தை ஆதரிப்பதாக எப்படி ஆகும்?

தயாராகி விட்டன! எமது புதிய வெளியீடுகள்!

மு. கருணாநிதி எழுதிய
வெள்ளிக்கிழமை
விலை ரூ. 2--0--0

கே. ஏ. மதியழகன் எழுதிய
டாக்டரம்மா
விலை ரூ. 1--0--0

மாறன் எம். ஏ. எழுதிய
வால்நட்சத்திரம்
விலை ரூ. 1--0--0

திராவிடப் பண்ணை
தெப்பக்குளம், திருச்சி-2.

✻ 5-ம் பக்கத் தொடர்ச்சி

சிறு தவறுதல்-ஒரு 'சைபர்' கூடியதால்! அதனால் பொது மக்களின் வரிப்பணத்தில் 72 லட்சம் தெண்டம்! இது யார் சொத்து? சும்மா கிடைத்த பணமா? புதையல் எடுத்த தனமா? அல்லது வானுலகத்தில் வாழ்வதாகக் கூறுகிருர்களே, அந்தத் தேவர்கள் கொட்டியளந்த தொகையா? இல்லை, இல்லை. நாம் நம் தசையையும் - இரத்தத்தையும் கொட்டி உழைத்து வரியாகக் கொடுத்த பணம் இத்தகைய பொறுப்பற்ற ஆட்சியால் பாழ்படுத்தப் படுகிறது. சரிதானா? இத்தகையவர்கள் ஆட்சி நீடிக்கத்தான் வேண்டுமா? இந்தக் கொடுமைகளை ஒழித்துக் கட்டவே திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் போட்டியிடுகிறது.

ஆட்சி பீடத்திலே அமர்ந்து கொண்டு கோலாகலபுரியை உற்பத்தி செய்துகொண்டு உல்லாசிகளாய் வாழ்கிருர்கள், காங்கிரஸ் கட்சியினர்!

1—4—54 முதல் 15—7—55 முடிய நூற்று நாற்பத்து நான்கு விருந்துகளை நடத்தியிருக்கிருர்கள் நமது மதிப்பிற்குரிய ஆட்சியாளர்கள்! நம்மை அடக்குவதற்காக நம் மீது ஏவப்படுவதும் 144—அவர்கள் தங்களை வெளியுலகுக்குக் காட்டுவதற்காகச் செய்த விருந்துகளும் 144!

என்ன பொருத்தம்! பள்ளி ஆசிரியர்கள் சம்பள உயர்வு கேட்டால் கையில் பணமில்லை என்று கூறுகிற இந்த சர்க்கார் விருந்தொன்றுக்கு அறுபத்தையாயிரம் ரூபாய்களைச் செலவிட்டுள்ளது! ஒரு விருந்துக்கு அறுபத்தையாயிரம்! அப்படி நூற்று நாற்பத்து நான்கு விருந்துகள்! இதிலே உள்ள வேதனை யிருக்கட்டும்—விசித்திரம் என்ன தெரியுமா? விஸ்கி, பிராந்தி, ஒயின் வகைக்காக மட்டும் இருபதினாயிரம் ரூபாய்கள் ஒவ்வொரு விருந்திலும்! இந்த யோக்கியர்கள் சார்பாகத்தான் நமது மதிப்பிற்குரிய காமராசர் கூறுகிருர், இந்தத் தி மு. கக்கள் சட்டசபையில் நுழைந்தால் கள்ளுக் கடையை மறுபடியும் திறந்து விடுவார்கள்—எனவே வோட்டு போடாதீர்கள் என்று, இப்போது மட்டும் என்னவோ கள்ளுக் கடைகளே இல்லாதது போல! கடை விஷயம் இருக்கட்டும்; விருந்து விஷயம் என்ன? இருபதினாயிரம் ரூபாய்களுக்கு விஸ்கியும், ஒயினுமாக அல்லவா கதர்ச் சட்டைக்கள் தொப்பையில் போயிருக்கிறது.

தி. மு. க.விற்கு பெண்கள் வோட்டு போடமாட்டாக்கள் என்று காமராசர் கூறுகிருர். நாங்கள் தாய்மார்களுக்கு என்ன துரோகம் செய்தோம்? சகோதரிகளே, தாய்மார்களே, தமக்கைமார்களே, அண்ணிமார்களே என அழைக்கிறோமே அதற்காகவா? நாங்கள் எழுதும் கதை—நாடகம்—சினிமா—கட்டுரை எல்லாவற்றிலும் பெண் உரிமை முரசு கொட்டுகிறோமே அதனாலா? எதனால் எங்களுக்குப் பெண்கள் வோட்டுப் போட மாட்டார்கள்? அப்படியே யிருக்கட்டுமே! காமராசருக்கு எப்படித் தெரிந்தது பெண்கள் வோட்டுப் போட மாட்டார்களென்பது? வேண்டுமானால் பக்தவத்சலத்துக்குத் தெரியலாம். படுக்கையறையில் பக்தவத்சலத்தின் பாரியார் 'கேட்டேளா கேட்டேள! பிராணபதே! பக்கத்து வீட்டுப் பங்கஜம் பகர்கிருள் 'தி. மு க. வுக்குப் பெண்கள் வோட்டுப் போடமாட்டார்களாம்' என்றுகூற—அதைக் கேட்ட பக்தவத்சலம் வெளியில் அதைக் கூறலாம்! சுப்பிரமணியத்திடம் அர்த்த ராத்திரியில் அந்தப்புரத்தில் அவருடைய அருமை மனைவியார் 'கேட்டேளா என் ஆருயிரே! அடுத்த வீட்டு அம்புஜம் கூறுகிருள், இந்தத் தீனா மூனா கானாவுக்குப் பெண்கள் வோட்டுப் போட மாட்டார்களாம்' என்று கூற அவர் அதைக்கூறலாம். ஆனால் காமராசருக்கு யாரிருக்கிருர்கள்? பெண்களை மாயை யென்றும்—பிசாசு என்றும் ஒதுக்கி வைத்திருக்கும் தனிக்கட்டையாயிற்றே! இவருக்கு எப்படித் தெரிந்தது பெண்கள் தி. மு. க. விற்கு ஓட்டளிக்க மாட்டார்கள் என்ற ரகசியம்?

நமது தலைவர் பெரியார் ராமசாமி அவர்கள் கண்ணீர்த்துளிகளை ஒழிப்போமென்கிருர்; நாமும் அப்படியே கூறுவோம். இந்த நாட்டிலே - தமிழகத்து மக்களின் துயரக் கண்ணீர்த் துளிகளை ஒழிப்போம்! அதற்காகத்தான் தேர்தலிலேயே பங்கு பெறுகிறோம். நாட்டிலே துயரால், துன்பத்தால், வறுமையால், ஆட்சியாளர்களின் அக்கறையின்மையால் ஏராளமானவர்கள் வடிக்கும் கண்ணீர்த்துளிகளை ஒழிக்கவேதான் திராவிட முன்னேற்ற கழகம் தேர்தலில் கலக்கிறது.

திராவிடக் கழகத் தோழர்கள் இன்று காங்கிரசை ஆதரிப்பது போலிருக்கிறார்களே, என்று நீங்கள் விசப்பும் வேதனையும் அடைய வேண்டாம். திராவிடக் கழகத் தோழர்கள் வோட்டுச் சீட்டைப் பெற்றுக் கொண்டு சென்று காளை மாட்டுப் பெட்டியிலா போடுவார்கள்? அப்படியா நீங்கள் நினைக்கிறீர்கள்? கட்டாயம் போடமாட்டார்கள். நமது உதய சூரியன் பெட்டியில் தான் போடுவார்கள். சந்தேகமே வேண்டாம்! ஏன் தெரியுமா? காளை மாட்டுப் பெட்டி கண்ணில் பட்டதும் காமராசர் தெரிவார்—அவர் பேசிய கடுஞ் சொற்கள் தானாகவே கருத்தில் நிழலாடும்! ஆம்! 'இந்த இராமசாமி நாயக்கர் யார்? அவருடைய முக மூடியைக் கிழித்தெறிவேன்' என்றுமுன்பு பேசிய கீழ்த்தர உரைகள்—திராவிடர் கழக எழுத்தாளர்களின் கட்டை விரலை வாங்குவேனென்று கூறிய கடுஞ் சொற்கள்—இவை யெல்லாவற்றையும் மறந்துவிட்டு மாட்டுப் பெட்டியிலா வோட்டைப் போடுவார்கள்? நிச்சயம் மாட்டார்கள்! அவர்களுக்கு நமது உழைப்பிலே ஆர்வமுண்டு. நமது முன்னேற்றத்திலே அக்கறையுண்டு. ஆகவே தான் நாம் சோம்பியிருந்து விடாது சுறுசுறுப்பாகப் பணியாற்றுவதற்காகத்தான் அவ்வாறெல்லாம் கூறித் தட்டி யெழுப்புகிருர்கள். நமது வெற்றிக்காகவே அவர்கள் அவ்வாறெல்லாம் கூறுகிருர்கள்.

✻

தி. மு. க. தேர்தல் நிதி நாடகங்கள்!

அறிஞர் அண்ணா; சம்பத்; ராஜேந்திரன்;
நாராயணசாமி குழுவினர் நடிக்கும்

சந்திர மோகன்

சிவகாசியில்	நெல்லையில்
23—2—57: சனி இரவு 9-30 மணிக்கு	24—2—57: ஞாயிறு இரவு 9-30 மணிக்கு

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4-128, மவுண்ட்ரோடு சென்னை-6. தமிழ்நாடு.